30th March 1964]

திரு. எம். எஸ். மணி : ஹோட்டல் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய உடைகள் இன்றையதினம் முதலாளி களால் கொடுக்கப்படாமல் இருக்கின்றன என்பது அரசாங்கத் திற்குத் தெரியுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அந்த மாதிரித் தகவல் ஒன்றுமில்லை.

Buckingham Canal

* 450 Q.--Sri P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government are aware that the condition of the Buckingham Canal is in a bad state causing injury to public health in the City of Madras; and

(*b*) what steps the Governmnt have taken in the matter?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம். சாக்கடை நிரம்பி வழியும் நிலையில் இருக்கையில் சில சமயங்களில் துர் நாற்றம் வீசுகின்றது.

(இ) சென்னை மாநகரில் வடிகால் அமைப்பை அபிவிருத்தி செய்யும் திட்டம் ஒன்றை அரசினர் ஏற்கெனவே அங்கீகரித் துள்ளனர். இத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்காக அண்மையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தை நிறைவேற்றி முடித் ததும், இந்த துர்நாற்றம் நீங்கும் என நம்பலாம்.

திரு. எம். எஸ். மணி : பக்கிங்காம் கால்வாயில் சிலநாட்கள் துர்நாற்றம் அடிக்கிறது; சில நாட்களில் துர்நாற்றம் அடிப்ப தில்லை. இதற்கு என்ன காரணம் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : வெயில் காலத்தில்தான் துர்நாற்றம் அதிகமாக வீசுகிறது. அதற்குக் காரணம் அந்த ஜலம் எவாப்பரேட் ஆவதுதான்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : இந்தத் திட்டத்தைப் பற்றி அடிக்கடி பேசப்பட்டு வருகிறது. இந்த வேலைகள் எப்போது துவங்கும் என்று அமைச்சர் அவர்கள் நிச்சயமாகக் கூறுவார் களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதற்கென்று ஒரு ஹை பவர் டெக்னிகல் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அவர் களுடைய ரிப்போர்ட்டை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ரிப்போர்ட் வந்த பிறகு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : பக்கிங்காம் கால்வாய், கூவம் நதி போன்றவற்றைச் சீர்திருத்த ஒரு கோடி ரூபாய் திட்டம் போட்டிருப்பதாக அண்மையில் செய்தி வெளி வந்தது. அது பற்றி விவரம் அறியலாமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும். டெக்னிகல் கமிட்டியின் ரிப்போர்ட் வந்த பிறகு, ட்ரேட்ஜர்ஸ் வந்த பிறகு வேலை ஆரம்பிக்கப்படும்.

[30th March 1964

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கூவம் நதித் தண்ணீரை சமுத்திரத்தில் திறந்து விட்டுவிட்டால் நாற்றம் போய்விடும் என்று சொல்லப்படுகிறது. அதைச் செய்யாததற்குக் காரணம் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கூவம் நதித் தண்ணீரைக் கடலுக்குள் தள்ளுவதற்குத்தான் டிரெஜர் தேவை. டிரெஜர் வந்த பிறகு வேலை மேற்கொள்ளப்படும்.

திரு. வை. சங்கரன் : பக்கிங்காம் கால்வாய்த் தண்ணீரில் சல்பர் டயாக்சைடு வாயுக்கள் இருப்பதால்தான் நாற்றம் இருக்கிறது என்று கூறுகிறார்கள். அந்த வாயுக்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கு எடுக்க முடியுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்தக் கேள்விக்கு டெக்னிகல் பர்சனல்தான் பதில் சொல்ல முடியும்.

திரு. மு. கருணாநிதி : கூவம், பக்கிங்காம் கால்வாய்த் தண்ணீரைச் சுத்தப்படுத்தி தொழிற்சாலைகளுக்குக் கொடுக்க ஆராய்ச்சி நடத்தப்பட்டதாகவும், அமைச்சர் அவர்களே அதைப் போய்ப் பார்வையிட்டதாகவும் கூறப்படுகிறது அது உண்மையா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பக்கிங்காம் தண்ணீரைப் போய்ப் பார்வையிடவில்லை. கொடுங்கையூர் சீவேஜ் பார்ம் மாதிரி சவுத் மெட்ராசில் ஏற்படுத்துவது பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அது நடைமுறைக்கு வரும்போது தக்க விளக்கம் கூற முடியும்.

புலவர் கா. கோவிந்தன் : பக்கிங்காம் கால்வாய்த் தண்ணீரைக் கடலில் விடுவதைக் காட்டிலும் நகரத்திற்கு வெளியே வெகு தூரத்திற்குக் கொண்டு சென்று பயிரிடுவதற்குப் பயன்படுத்தினால் நல்ல விளைச்சல் ஏற்படக்கூடுமல்லவா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அந்தத் தண்ணீரைக் ககால்வாய் வழியாகக் கொண்டு செல்வது இயலாத காரியம் என்பது எக்ஸ்பர்ட்களின் கருத்து.

திரு. எ. கோ. கோபாலகிருஷ்ணன் : பக்கிங்காம் கால்வாய், கூவம் இவைகளின் தண்ணீரை மெஷின் வைத்துக் கடலில் தள்ளப் போவதாகச் சொன்னார்கள். அந்த மெஷின்கள் எப்போது வரும். இப்போது புல்டோசர்களை வைத்து அந்த மணலை நீக்கினால் தண்ணீர் ஓடிவிடுமல்லவா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மணலை நீக்கினால் மறுபடியும் மணல் சேர்ந்துகொண்டுதான் இருக்கும். டிரெஜர் 24 மணி நேரமும் வேலை செய்தால்தான் தண்ணீர் கடலுக்குச் செல்ல வசதியாயிருக்கும். ஃபாரின் எக்ஸ்சேஞ்சு கிடைக்காத காரணத்தால் அந்த டிரெஜரை வாங்க இயலாமல் இருந்தது. இப்போது மத்திய அரசாங்கம் ஃபாரின் எக்ஸ்சேஞ்சை ரிலீஸ் பண்ணி இருக்கிற காரணத்தால் விரைவில் அந்த டிரெஜர்கள் வாங்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

30th March 1964]

திரு. இரா. நெடுஞ்செழியன் : பக்கிங்காம் கால்வாய், கூவம் ஆகியவற்றிலிருந்து நோய்கள் பரவாமல் இருக்க இப்போது என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தற்போது அதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுப்பதற்கில்லை. அதைப் பற்றி நம்முடைய பப்ளிக் ஹெல்த் டிப்பார்ட்மெண்டார் ஆராய்ச்சி செய்தார்கள். அதிகப் பணம் செலவாகும் என்ற காரணத்தால் ட்ரெட்ஜர் வைத்துத்தான் சுத்தம் செய்ய முடியும் என்ற முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : பக்கிங்காம் கால்வாய், கூவம் நதி ஆகியவற்றினுல்தான் சென்னை நகரில் கொசுத் தொல்லை அதிகமாக இருப்பதாகவும், இந்தத் திட்டத்தை அமல்படுத்தினுல் கொசுக்கள் பாதிக்கப்படும் என்ற காரணத்தினுல் கொசுக்களிடம் இருந்து அரசாங்கத்திற்கு ஏதேனும் விண்ணப்பம் வந்திருக்கிறதா ? அதனுல்தான் இந்தத் திட்டம் காலதாமதப்படுகிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பக்கிங்காம் கால்வாய், கூவம் ஆகியவற்றினுல்தான் கொசுக்கள் அதிகம் என்று சொல்வதற்கில்லை. தண்ணீர் தேங்கும் இடங்களில் எல்லாம் கொசுக்கள் இருக்கும். சென்னையில் சமீபத்தில்தான் கொசுக்கள் சிறிது அதிகமாக வந்தன. அதுவும் தற்போது போய்விட்டன.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் அவர்களுக்குக் கொசுக்களிடமிருந்து ஏதாவது அப்ளிகேஷன் வந்திருக்கிறதா ? (சிரிப்பு) கொசுக்களுடன் எவ்வாறு பேசுவது என்பதெல்லாம் அவருக்குத் தெரியுமா ?

திரு. வி. எஸ். எஸ். மணி : பக்கிங்காம், கூவம் கால்வாய், பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருப்பதால் இவை சென்னை நகரத்திற்கு வராதவாறு தடுத்து வேறு வழியில் திருப்பி விட்டு அந்த இடங்களையெல்லாம் வீடு கட்டுவதற்கு பயன்படுத்த முன் வருவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்தப் பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என்பதற்குத்தான் ஸ்கீம் போடப்பட்டு தயாராக இருக்கிறது.

திரு. எம். எஸ். மணி : பக்கிங்காம் கால்வாயிலும், கூவம் நதியிலும் சுமாரான நாற்றம் வீசுகிறது. வெளியூர்களிலிருந்து மத்திய சர்க்கார் அமைச்சர்கள் வருகிறபோது அதிக நாற்றம் அடிக்கிறது. அப்போது ஏதோ ரிசர்வாயர்களைத் திறந்து விடுவதால் குழம்பிப் போய் அதிக நாற்றம் அடிக்கிறது. இது பற்றி மத்திய சர்க்கார் அமைச்சர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காக அவ்வாறு செய்யப்படுகிறது என்பது உண்மையா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அந்த மாதிரி ஒன்றுமில்லை.

[30th March 1964

கனம் சபாநாயகர் : சொல்லப்படுவதை எல்லாம் வைத்து கேள்விகள் கேட்கக் கூடாது.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : கூவம் பக்கிங்காம் நதியை சுத்தம் செய்வதோடு நகர வசதிக்காக போக்குவரத்து திட்டமும் அதோடு இணைக்கப்பட்டிருப்பது உண்மையா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஆம். ஜெட்டீஸ் போல் செய்து போட்ஸ் விட, முதலாவது ஸ்டேஜ்க்கு 60 லட்சம், பின் செகன்ட் ஸ்டேஜ் இருக்கிறது. ஸ்கீம் எல்லாம் ஒழுங்காக இருக்கிறது. டரெட்ஜேர்ஸ் குறைவாக இருப்பதால் இயலாமல் இருக்கிறது. அது கிடைத்து விட்டால் போட் விடுவது, சுற்றுப்புறத்தில் பார்க் அமைப்பது என்பது பற்றியெல்லாம் ஸ்கீம் இருக்கிறது.

ஆல்கஹால் கலந்த மருந்துகள் தயாரித்தல்

* 453 கேள்வி.—**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசாங்க பதிவுபெற்ற வைத்தியர்களுக்கு 30 சத விகிதம் ஆல்கஹால் கலந்த மருந்துகள் தயாரிக்க அனுமதி கொடுக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI P. KAKKAN : No.

இல்லை.

திரு. ம. கமலநாதன் : இப்போது ஆல்கஹால் எந்த அளவுக்கு கலந்த மருந்துகள் தயாரிக்கலாம் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : எந்த அளவிற்கு என்றில்லை. விண்ணப்பங்கள் வருருவதைப் பார்த்து போர்டு பரிசிலனை செய்துதான் அப்போதக்கப்போது எவ்வளவு கொடுக்க முடியுமோ அப்படி கொடுக்கப்பட்டு வருகிறது.

புலவர் கா. கோவிந்தன் : மருந்துக் கடைகளில் பெயின்ட் என்ற அளவிலே மருந்துகள் விற்கப்படுகின்றன சொட்டு மருந்து என்ற அதை மது அருந்துகிறவர்கள் பயன்படுத்துகின்ற நிலை இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட மருந்துகள் விற்பதை சர்க்கார் தடை செய்யும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. பூ. கக்கன்: தனிக் கேள்வி வேண்டும்

திரு. வி. எஸ். எஸ். மணி : பெர்மிட் வழங்குவதில் ஒன்று, இரண்டு யூனிட் என்று வாங்கப்படுகிறது. எந்த அடிப்படையில் இந்த 1, 2 யூனிட் என்பது நிர்ணயிக்கப்படுகிறது ?

THE HON. SRI P. KAKKAN : L. 1. Manufacture of medicinal and toilet preparations containing alcohol, opium, Indian hemp and other narcotic drugs and narcotics under bond for payment of duty.

L.2 Manufacture of medicinal and toilet preparations containing alcohol, opium, Indian hemp and other narcotic drugs and narcotics outside bond.